இதுநாள் வரையிலும் பொதுமக்கள் செலுத்தவில்லை, இடவசதியும் மிகவும் குறைவாக இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஆய்வுசெய்து, இடம் ஏதாவது அருகில் அரசிற்கு கிடைக்கும்பட்சத்தில் அதை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு, பரிசீலனை செய்து, வருகின்ற காலங்களில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

தேனீ வளர்ப்புத் தொழில்

***21307—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய், மூன்றும் ஒருங்கிணைந்த தெய்வத் திருமகளாய்த் திகழும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, என்னுடைய பதிலை வழங்குகிறேன்.*

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக தமிழ்நாட்டில் சமவெளிப் பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் தஞ்சை மாவட்டமும் ஒன்றாகும். அதனடிப்படையில், தஞ்சை

2015 மார்ச் 27]

மாவட்டத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் 10 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு தேனீ வளர்ப்புத் தொழில் பயிற்சி முறையாக அளிக்கப்பட்டு, பயிற்சியின் முடிவில் தேன்கூடுகள், தேன் எடுக்கும் கருவிகள், தேனீக்கள் மற்றும் இதர உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல மாவட்டங்களில் தேனீ வளர்ப்புத் தொழில் நடந்தாலும், தஞ்சாவூரைப் பொறுத்தமட்டில், அங்கே ஏராளமான தென்னை மரங்கள் உற்பத்தி ஆகின்றன. அங்கே தேனீ வளர்ப்புக்குத் தேவையான மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. அதுமாத்திரம் இல்லை. நீர் ஆதாரம்கூட அங்கே இருக்கிறது. ஆகவே, தஞ்சாவூர் மாவட்டத்திலே தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவேரி டெல்டா பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் தேனீ வளர்ப்புத் தொழிலை மேலும் விரிவுபடுத்திட, தேனீ பண்ணைகள் அமைத்து பராமரிக்க விருப்பம் உள்ள தேனீ வயலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்டிட வாரியத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஆர்வம் உள்ள நபர்கள் தேன் பண்ணை அமைக்க முன்வருவார்களேயானால் பாரதப் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு

உருவாக்கும் திட்டத்தின்மூலம் தேன் பண்ணை அமைத்து, தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க 25% முதல் 35% வரை மானியத்துடன்கூடிய கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகை திட்டத்தின்மூலம் பயன்பெற சம்பந்தப்பட்ட வங்கி மேலாளர்களுக்கு விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு, பயனாளிகளுக்குக் கடன் உதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-25

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேறு முக்கியமான தீர்மானம் வர இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) முக்கியமான தீர்மானம் வர இருக்கிறது, பிறகு பேசுங்கள் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முக்கியமான அரசினர் தீர்மானம் வர இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அறிக்கை வந்தவுடன் பேசலாம்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைவிட முக்கியமான தீர்மானம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை, முக்கியமான தீர்மானம் ஒன்று வர இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)